**கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி.**

**அ.வ.எண்.239/2010**

**தேதி : 22.10.2024**

**(வா.சா.3 ) – திரு. நவநீதகிருஷ்ணன்**

**சாட்சி அழைக்கப்பட்டு, 3ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.**

**குறுக்கு விசாரணை : (3ம் பிரதிவாதி தரப்பில்)**

1. வழக்குச்சொத்தின் சர்வே எண்.326/1பி. அதன் விஸ்தீரணம் 4 ஏக்கர் 23 செண்டு. அதன் நான்குமால் தெரியுமா என்றால், வடக்கில் வறட்டாறு. கிழக்கில் ஆறுமுககவுண்டர் நிலம், தெற்கில் சுப்பைய கவுண்டர் நிலம், மேற்கில் கொடைக்கானல் ரோடு. சொத்தை ரெங்கராஜ் பிள்ளை என்பவர் கிரையம் வாங்கினார். அவர் கிரையம் வாங்கிய தேதி எனக்கு தெரியாது, கிரையம் வாங்கிய வருடம் 1975. நான் அந்த கிரைய பத்தில் நான் சாட்சி கையொப்பமிடவில்லை, அன்றைய தேதி பதிவு அலுவலகத்திற்கு செல்லவில்லை.

2. 01.09.1975 அன்று சொத்தை ரங்கசாமி பிள்ளையும், அவருடைய இரு மக்களான தெண்டபாணி மற்றும் குப்புராஜ் ஆகியோரும் கூட்டாக கிரையம் வாங்கியதாக சொன்னால் சரிதான். ரெங்கசாமி பிள்ளை அவருடைய 3ல் 1 பாகத்தை 29.11.1980ம் தேதியன்று பதிவு ஆவணம் மூலம் மகன் தெண்டபாணிக்கு தானசாசனம் எழுதி வைத்தார் என்றால் தெரியாது. அதன்பின்பு குப்புராஜ் அவருடைய சகோதரர் தெண்டபாணிக்கு 3ல் 1 பாகத்தை பொறுத்து 11.12.1989 அன்று ஒரு பொது அதிகார ஆவணம் எழுதிவைத்தார் என்றால் அது எனக்கு தெரியாது.

3. குப்புராஜ் எழுதிவைத்த பொது அதிகாரித்தின் அடிப்படையிலும், ரெங்கசாமி பிள்ளை எழுதிவைத்த தானசெட்டில்மெண்ட் ஆவணத்தின் அடிப்படையிலும் தெண்டபாணி 3ம் பிரதிவாதிக்கு முழுச்சொத்தையும்

29.11.1993ம் தேதியன்று இரு கிரைய ஆவணங்கள் மூலம் பாத்தியப்படுத்தியுள்ளார் என்று சொன்னால் எனக்கு தெரியாது. ஆனால் கிரையம் செய்து கொடுத்ததை ரத்து செய்துவிட்டார்கள் என்பது எனக்கு தெரியும். 07.11.1995ம் தேதியன்று இரண்டு பத்திரங்கள் மூலமாக அவர் எழுதிவைத்த கிரைய ஆவணங்களை ரத்து செய்தார் என்றால் சரிதான்.

4. கிரைய ஆவணங்களை ரத்து செய்தது சட்டடவிரோதம் என்று பழனி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் 3ம் பிரதிவாதி மாசிலாமணி அ.வ.எண்.210/1996 என்ற வழக்கை தாக்கல் செய்து, மேற்படி ஆவணங்களை ரத்து செய்தது செல்லாது என 09.06.2003 அன்று தீர்ப்பாகியுள்ளது என்றால் அது எனக்கு தெரியாது. மேற்படி வழக்கில் தெண்டபாணி ஒருதலைப்பட்சமாக்கப்பட்டு, அதனை ரத்து செய்யவேண்டுமென மனு தாக்கல் செய்து, அது தள்ளுபடியான விபரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. அந்த தள்ளுபடியான உத்தரவின்மீது சீராய்வு மனு தாக்கல் செய்து அது தள்ளுபடியான விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

5. ரெங்கராஜ் பிள்ளை 4 ஏக்கர் 23 செண்டில் கீழ்புறம் 2 ஏக்கரை மட்டும் ஒவ்வொரு ஏக்கராக தெண்டபாணி மற்றும் குப்புராஜுக்கு 1986ம் வருடம் பாகம் பிரித்துக்கொடுத்துவிட்டார். மீதம் உள்ள 2 ஏக்கர் 23 செண்டை தன் கைவசம் வைத்திருந்து, தெண்டபாணியின் மகக்ளான வைரமுத்து, விஜயலட்சுமி, சோழகிரி ஆகியோருக்கு உயில் எழுதிவைத்துள்ளார். வீட்டை மராமத்து பார்க்கும்போது உயில் பத்திரத்தையும், பாகப்பிரிவினை பத்திரத்தையும் தெண்டபாணியின் மனைவி சுசீந்திரா என்னிடம் காட்டினார். என்னுடைய முதல் விசாரணை வாக்குமூலத்தில் இந்த விபரத்தை சொல்லவில்லை என்றால் சரியல்ல. சொல்லியிருக்கிறேன்.

6. ரெங்கசாமி பிள்ளை 1980லேயே அவருடைய 1/3 பாகத்தை தானசெட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்த பிறகு பாகப்பிரிவினை மற்றும் உயில் சாசனம் எழுதிவைக்க எவ்வித உரிமையும் இல்லை என்று சொன்னால் அவர்

எழுதிவைத்திருக்கிறார். மேற்சொன்ன பாகப்பிரிவினை மற்றும் உயில் ஆவணங்கள் பதிவு செய்யப்படவில்லை. நான் மேற்படி ஆவணங்களில் சாட்சி கையொப்பமோ, வேறு கையொப்பங்களோ செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி இரு ஆவணங்கள் எழுதப்பட்ட காலத்தில் நான் உடனில்லை. அதில் யார் சாட்சி கையொப்பம் போட்டார்கள், யார் எழுதினார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். அந்த இரண்டு ஆவணங்களுக்கும் முத்திரைத்தாள்கள் யார் பெயரில் வாங்கப்பட்டது என்று தெரியுமா என்றால் தெரியாது.

7. பாகப்பிரிவினை ஆவணம் மற்றும் உயில் ஆவணம் ஆகியவை 3ம் பிரதிவாதிக்கு சொத்துக்களை விற்றபிறகு மோசடியாக தயார் செய்யப்பட்டவை என்றால் சரியல்ல. நான் வாதிகளுக்கு ஆதரவாக அவர்களிடம் கையூட்டு பெற்றுக்கொண்டு பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதிகளிடம் வேலை பார்த்தற்கு என்னிடம் எழுத்துமூலம் ஆதாரங்கள் உள்ளதா என்றால் இல்லை.

<u>மறு விசாரணை :–</u> இல்லை.

K BHARATHI Digitally signed by K BHARATHI Date: 2024.10.22 13:20:30 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
பழனி.